1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற செமேரு எரிமலை அமைந்துள்ள நாடு எது?

அ. பிலிப்பைன்ஸ்

ஆ. இந்தோனேசியா ☑

இ. ஜப்பான்

ஈ. ஆஸ்திரேலியா

✓ இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள செமேரு எரிமலை வெடிக்கத் தொடங்கியது. இந்த வெடிப்பினால் ஏற்பட்ட எரிமலை சாம்பலைத் தொடர்ந்து கிழக்கு ஜாவா மாகாணத்திலிருந்த ஈராயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தோனேசியா பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின்படி, இதுவரை இதன் காரணமாக எந்தவொரு நபரும் பலியாகவில்லை. இந்தோனேசிய தலைநகரம் ஜகார்த்தாவில் இருந்து தென்கிழக்கே 640 கிலோமீட்டர் தொலைவில் செமேரு எரிமலை அமைந்துள்ளது.

2. இந்தியாவில் நடைபெற்ற முதல் G20 ஷெர்பா கூட்டத்தை நடத்திய நகரம் எது?

அ. உதய்பூர் ☑

ஆ. ஜோத்பூர்

இ. வாரணாசி

ஈ. காந்தி நகர்

✓ இராஜஸ்தான் மாநிலத்தின் உதய்பூர் நகரத்தில் இந்தியாவின் G20 தலைவர் பதவிக்கான ஷெர்பா கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் சர்வதேச ஷெர்பாக்கள், அவர்களது பிரதிநிதிகள் மற்றும் G20 உறுப்பினர்கள், ஒன்பது விருந்தினர் நாடுகள் உட்பட அழைக்கப்பட்ட சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். முதலாவது ஷெர்பா கூட்டத்தின் விவாதங்கள் இந்தியாவின் G20 ஷெர்பா, அமிதாப் காந்த் என்பவரால் தொடங்கப்பட்டது.

3. தேசிய புள்ளியியல் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. இராஜீவ லக்ஷ்மன் கரண்டிகர் ☑

ஆ. அமிதாப் காந்த்

இ. இராஜீவ் குமார்

ஈ. பரமேஸ்வரன்

✓ இந்திய தேசிய புள்ளியியல் ஆணையத்தின் பகுதிநேர தலைவராக சென்னை கணித நிறுவனத்தில் தகைமைப் பேராசிரியராக பணியாற்றி வரும் இராஜீவ லக்ஷ்மன் கரண்டிகர் மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இரங்கராஜன் ஆணையத்தின் பரிந்துரையின்கீழ், கடந்த 2005ஆம் ஆண்டு ஜூனில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய புள்ளியியல் ஆணையம் என்பது ஒரு தன்னாட்சிமிக்க அமைப்பாகும்.

4. அண்மையில், 'B-21' எனப்பெயரிடப்பட்ட அதன் சமீபத்திய அணுவாற்றல் திறன்கொண்ட மறைந்திருந்து தாக்கும் குண்டுதாரி விமானத்தை அறிமுகப்படுத்திய நாடு எது?

அ. இஸ்ரேல்

ஆ. ரஷ்யா

இ. அமெரிக்கா ☑

ஈ. உக்ரைன்

✓ அமெரிக்க வான்படை தனது சமீபத்திய அணுவாற்றல் திறன்கொண்ட மறைந்திருந்து தாக்கும் குண்டுதாரியான 'B-21'ஐ வெளியிட்டது. இது பனிப்போரில் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட விமானங்களுக்கு மாற்றாக இருக்கும். இந்தப்புதிய குண்டுதாரி விமானம் தயாரிப்பதற்கு, ஒவ்வொன்றுக்கும் சுமார் $700 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவாகும். இந்தக் குண்டுதாரி விமானத்தால் அணு மற்றும் மரபார்ந்த ஆயுதங்களை எடுத்துச் செல்லவியலும்.

5. இந்தியாவில் தேர்தல் பத்திரங்களை விற்பதற்கும் பணமாக்குவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் எது?

அ. பாரத வங்கி ☑

ஆ. NITI ஆயோக்

இ. இந்திய ரிசர்வ் வங்கி

ஈ. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்

✓ நாடு முழுவதுமுள்ள பாரத வங்கியின் (SBI) 29 கிளைகள்மூலம் தேர்தல் பத்திரங்களை விற்பனை செய்வதற்கும் பணமாக்குவதற்கும் அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளது. தேர்தல் பத்திரங்களை ஓர் இந்திய குடிமகன் அல்லது இந்தியாவில் இணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட ஒரு நிறுவனத்தால் வாங்கவியலும். ஒரு தனி நபர் தேர்தல் பத்திரங்களை தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மற்ற நபர்களுடன் இணைந்து வாங்கலாம்.

6. UNESCOஇன் 2022 – உலக தத்துவ நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. The Human of the Future ☑

ஆ. Philosophy and Humanity

இ. Growth and Humanity

ஈ. Development of Thoughts

✓ 2022 – உலக தத்துவ நாளானது நவம்பர் மாதம் மூன்றாவது வியாழனன்று உலகம் முழுவதும் நெஸ்கோவால் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு கலாசாரத்திற்கும், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மனித சிந்தனையின் வளர்ச்சிக்கு தத்துவத்தின் பங்களிப்பை இந்நாள் எடுத்துக்காட்டுகிறது. 2022ஆம் ஆண்டு உலக தத்துவ நாளைக் கொண்டாட, UNESCOஉம் மற்றும் தற்கால கலைகளின் தேசிய அரங்கமும் லெ ஃப்ரெஸ்னோயும் இணைந்து பாரிஸில் உள்ள UNESCO தலைமையகத்தில். 'The Human of the Future – எதிர்காலத்தின் மனிதன்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்தன.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற காங்க்ரா நுண்ணோவியம் தயாரிக்கப்படுகிற மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. அஸ்ஸாம்

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற 17ஆவது G20 மாநாட்டின் நிறைவுநாளில், ஹிமாச்சல பிரதேசத்தின் காங்க்ரா நுண்ணோவியத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு பிரதமர் நரேந்திர மோதி வழங்கினார். மேலும் ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸுக்கு ஹிமாச்சலின் மந்தி மற்றும் குலு மாவட்டங்களில் தயாரிக்கப்படும் ஒரு கனல் பித்தளை தொகுப்பையும், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனிக்கு வட குஜராத்தில் தயாரிக்கப்பட்ட கையால் நெய்யப்பட்ட ஒரு படன் படோலா துப்பட்டாவையும் பிரதமர் வழங்கினார். அது, 'இரட்டை இகாட்' என்ற தொழில்நுட்பத்தில் நெய்யப்பட்டதாகும்.

8. 2022 – உலக கழிப்பறை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Hygiene and Growth

ஆ. Making the Invisible Visible ☑

இ. Leaving No one Behind

ஈ. Access to Toilet Services

✓ கழிப்பறைகளின் கண்டுபிடிப்பைக் குறிக்கவும், சுகாதார நெருக்கடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவுமாக ஒவ்வோர் ஆண்டும் நவ.19 அன்று உலக கழிப்பறை நாள் அனுசரிக்கப்படுகிறது. உலக கழிப்பறை நாளானது ஐநா–நீர் மற்றும் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களின் கூட்டுறவில் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு (2022) உலக கழிப்பறை நாளுக்கானக் கருப்பொருள், 'Making the Invisible Visible' என்பதாகும்.

9. 2022 – உலக குழந்தைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Inclusion, For Every Child ☑

ஆ. Children's Rights

இ. International Togetherness

ஈ. Digital Access for All

✓ சர்வதேச ஒற்றுமை, உலகெங்கிலும் உள்ள குழந்தைகளிடையே விழிப்புணர்வு மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்காக நவ.20ஆம் தேதி உலக குழந்தைகள் நாள் கொண்டாடப்படுகிறது. இது முதன்முதலில், கடந்த 1954இல் உலகளாவிய குழந்தைகள் நாளாக நிறுவப்பட்டது. ஐநா பொதுச்சபை குழந்தைகள் உரிமைகள்பற்றிய பேரறிவிப்பு மற்றும் தீர்மானம் என இரண்டையும் ஏற்றுக்கொண்ட தேதியின் ஆண்டுநிறைவையும் இது குறிக்கிறது. இந்த ஆண்டு, "Inclusion, For Every Child" என்பது இந்த நாளுக்கானக் கருப்பொருளாக உள்ளது.

10. 2023 – ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சிமாநாட்டுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. SECURE SCO ☑

ஆ. SAFE SCO

இ. SUSTAINABLE SCO

ஈ. SOVEREIGN SCO

✓ எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் SCO அமைப்பின் தலைவராக இருந்து அடுத்த SCO உச்சிமாநாட்டை நடத்தும் பொருட்டு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) அதிகாரப்பூர்வ வலைத்தளத்தை இந்தியா தொடங்கியுள்ளது. 2023 – SCO உச்சிமாநாட்டுக்கானக் கருப்பொருள், 'SECURE SCO' என்பதாகும். SCO அமைப்பின் உறுப்பு நாடுகள் இடையே சுழற்சி முறையில் செல்லும் அவ்வமைப்பின் தலைமைப் பதவியை உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் இந்தியா அடைந்தது. உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட் நகரத்தில் நடந்த உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கவுன்சில் கூட்டத்தில், SCO உறுப்பு நாடுகளின் தலைவர்கள் சமர்கண்ட் பிரகடனத்தில் கையெழுத்திட்டனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தோனேசிய எரிமலையில் சீற்றம்

இந்தோனேசியாவின் மிகவுயரமான எரிமலையில் சீற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியைச் சேர்ந்தவர்களை மீட்குப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: கிழக்கு ஜாவா மாகாணத்தில் அமைந்துள்ள நாட்டின் மிகவுயரமான செமேரு எரிமலையில் சீற்றம் ஏற்பட்டது. இதனால் 1,500 மீ உயரத்துக்கு சாம்பல் மண்டலம் எழுந்தது. அதையடுத்து அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் ஊர்களில் ஏராளமான வீடுகள் சாம்பலில் புதையுண்டன. இதில் யாரும் உயிரிழந்ததாக உடனடி தகவல் இல்லை.